**செய்ய வேண்டியவை**

1. உங்கள் ஏடிஎம் பரிவர்த்தனைகளை முழுமையான தனியுரிமையுடன் நடத்துங்கள், உங்கள் தனிப்பட்ட அடையாள எண்ணை (பின்) உள்ளிடுவதை யாரையும் பார்க்க விட வேண்டாம்.
2. பரிவர்த்தனை முடிந்ததும் ஏடிஎம் திரையில் வரவேற்பு திரை காட்டப்படுவதை உறுதி செய்யவும்.
3. உங்கள் தற்போதைய மொபைல் எண் வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதிசெய்து கொள்ளுங்கள், இதன் மூலம் உங்களின் அனைத்து பரிவர்த்தனைகளுக்கும் அலெர்ட்களைப் பெறலாம்.
4. ஏடிஎம்மைச் சுற்றி உள்ளவர்களின் சந்தேகத்திற்கிடமான நடமாட்டம் அல்லது உங்களுடன் உரையாடலில் ஈடுபட முயற்சிக்கும் அந்நியர்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும்.
5. பரிவர்த்தனை முடிந்தவுடன் வணிகரால் உங்களுக்கு வழங்கப்பட்ட கார்டு உங்களுடையதுதானா என்பதைச் சரிபார்க்கவும்.
6. ஏடிஎம்/டெபிட் கார்டு தொலைந்துவிட்டாலோ அல்லது திருடப்பட்டாலோ உடனடியாக வங்கிக்குத் தெரிவிக்கவும். அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை ஏதேனும் நடந்திருந்தால் புகாரளிக்கவும்.
7. பரிவர்த்தனை எச்சரிக்கை எஸ்எம்எஸ்கள் மற்றும் வங்கி அறிக்கைகளை தவறாமல் சரிபார்க்கவும்.
8. பணம் வழங்கப்படாமலும், ஏடிஎம்மில் "கேஷ் அவுட்" என காட்டப்படாமலும் இருந்தால், அறிவிப்புப் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணில் வங்கிக்குத் தகவல் தெரிவிக்கவும்.
9. டெபிட் செய்யப்பட்ட தொகைக்காக உங்கள் மொபைலில் எஸ்எம்எஸ் வந்துள்ளதா என உடனடியாகச் சரிபார்க்கவும்.
10. உங்கள் கார்டைப் பெற்றவுடன் அதன் பின்பகுதியில் உள்ள ஸ்ட்ரிப்பில் கையொப்பமிடவும்.
11. உங்கள் பின் எண்ணை மனப்பாடம் செய்துகொண்டு, பின் எண்ணின் அனைத்து ஆதாரங்களையும் அழிக்கவும்.
12. பின் எண்ணை குறித்துக் கொண்டவுடன் நீங்கள் பெற்ற பின் மெயிலரை அழித்துவிடவும்.
13. எப்போதும் பின் எண்ணை நீங்கள் பெற்றவுடன் சீக்கிரமாக அதை மாற்றவும்.
14. எப்போதும் பின் எண்ணை குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மாற்றிக் கொண்டே இருக்கவும், காலாண்டிற்கு ஒரு முறை மாற்றினால் நல்லது.
15. கார்டின் முதல் பயன்பாடு ஏடிஎம்மில் செய்யப்பட வேண்டும், இல்லையெனில் பாய்ண்ட் ஆஃப் சே ல் (பிஓஎஸ்) டெர்மினலில் ஏற்றுக்கொள்ளப்படாது.
16. உங்கள் ஏடிஎம் பரிவர்த்தனைகளுக்கான எஸ்எம்எஸ் அலெர்ட்களைப் பெற வங்கியில் உங்கள் மொபைல் எண்ணைப் பதிவு செய்யவும்.
17. கணக்கில் அங்கீகரிக்கப்படாத கார்டு பரிவர்த்தனைகள் நடந்ததாக கவனிக்கப்பட்டால், உடனடியாக வங்கிக்கு தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். உங்கள் டெபிட் கார்டைப் பயன்படுத்தி மோசடியாக பணம் எடுக்கப்பட்டால் இது உங்களுக்கு உதவும்.
18. உங்கள் கார்டை அது காணாமல் போனால் உடனடியாகத் தெரிந்துகொள்ளும் வகையில், பாதுகாக்கப்பட்ட இடத்தில் சேமித்து வைக்கவும்.
19. பணம் எடுக்கும்போது உங்கள் ஏடிஎம் கார்டைப் பாதுகாக்கவும், அதை பத்திரமாக பெற்றுக்கொள்வதையும் உறுதிசெய்யவும்.
20. ஏடிஎம்-கம்-டெபிட் கார்டை காந்தப் பட்டை சேதமடையாத வகையில் கவனமாக சேமித்து வைக்கவும்.
21. நீங்கள் ஏடிஎம்மை அணுகுவதற்கு முன், சந்தேகத்திற்கிடமான முறையில் தோற்றமளிக்கும் நபர்கள் இருக்கிறார்களா என அந்தப் பகுதியைச் சரிபார்க்கவும். நீங்கள் பாதுகாப்பாக உணரவில்லை என்றால் உடனடியாக ஏடிஎம்மிலிருந்து வெளியேறவும்.
22. நீங்கள் ஏடிஎம் பரிவர்த்தனையைத் தொடங்கிய பிறகு சந்தேகத்திற்கிடமான அல்லது வேறு ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால், நீங்கள் பரிவர்த்தனையை ரத்துசெய்துவிட்டு வெளியேறலாம்.
23. "ஷோல்டர் சர்ஃபிங் (தோளருகில் வந்து உங்களையும் உங்கள் கார்டையும் நோட்டம் விடுதல்)" குறித்து எச்சரிக்கையாக இருக்கவும். பின் எண்ணை உள்ளிடும்போது உங்கள் உடலைப் பயன்படுத்தி கீபேடை மறைப்பதன் மூலம் மற்ற பார்வையாளர்களிடமிருந்து உங்கள் பின் எண்ணை மறைக்கவும்.
24. பரிவர்த்தனை செய்த பிறகு, உங்கள் கார்டு மற்றும் உங்கள் ரசீது உங்களிடம் இருப்பதை உறுதிசெய்த பிறகு, உடனடியாக வெளியேறவும்.
25. உங்கள் பரிவர்த்தனையை நீங்கள் முடித்தவுடன், புறப்படுவதற்கு முன், ஏடிஎம்மில் 'வரவேற்பு திரை' காட்டப்படுவதையும், அது ஸ்க்ரோலிங் செய்வதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
26. கணக்கு புத்தக உள்ளீடுகளின் சரியான தன்மையை அவ்வப்போது சரிபார்க்கவும். அங்கீகரிக்கப்படாத கார்டு பரிவர்த்தனைகள் நடந்ததாக கவனிக்கப்பட்டால், உடனடியாக வங்கிக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
27. பாயிண்ட் ஆஃப் சேல் (பீஓஎஸ்)-ல் உங்கள் முன்னிலையில் கார்டு ஸ்வைப் செய்யப்பட்டிருப்பதை உறுதிசெய்யவும்.
28. உங்கள் ஏடிஎம்/டெபிட் கார்டு தொலைந்துவிட்டாலோ அல்லது திருடப்பட்டாலோ, உடனடியாக கார்டை ஹாட்லிஸ்ட் செய்யவும். டெபிட் கார்டை ஹாட்லிஸ்ட் செய்ய, உதவி மைய எண் - 1800 1200 1200-க்கு அழைக்கவும் அல்லது அருகிலுள்ள கிளைக்குச் செல்லவும்.
29. உங்கள் கணக்கு காலாவதியானவுடன் அல்லது மூடப்பட்டவுடன் உங்கள் கார்டை அழிக்கும்போது, அதை காந்தப் பட்டையின் குறுக்காக நான்கு துண்டுகளாக வெட்டவும்.
30. ஏடிஎம்களில் கூடுதல் சாதனங்கள் இணைக்கப்பட்டுள்ளதா என சரிபார்க்கவும். இவை உங்கள் தரவை பதிவுசெய்ய வைக்கப்படலாம். அத்தகைய சாதனம் ஏதேனும் கண்டறியப்பட்டால் உடனடியாக காவலாளிக்கு/வங்கிக்கு தகவல் தெரிவிக்கவும்.

**செய்யக்கூடாதவை**

1. கார்டில் உங்கள் பின் எண்ணை எழுத கூடாது, உங்கள் பின் எண்ணை மனப்பாடம் செய்யவும்.
2. உங்கள் கார்டை பயன்படுத்துவதற்காக அந்நியர்களின் உதவியைப் பெறாதீர்கள் அல்லது அதை யாரிடமும் ஒப்படைக்காதீர்கள்.
3. உங்கள் பின் எண்ணை வங்கி ஊழியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் உட்பட யாருக்கும் தெரிவிக்க வேண்டாம்.

4. நீங்கள் பணம் செலுத்தும் போது கார்டுகள் உங்கள் பார்வையை விட்டு செல்ல அனுமதிக்காதீர்கள்.
5. பரிவர்த்தனை செய்யும் போது மொபைல் போனில் பேசுவதை தவிர்க்கவும்.
6. உங்கள் நெருங்கிய உறவினரிடம்/நண்பரிடம் அல்லது வங்கியைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் எவரிடமும் கூட, உங்கள் கார்டை கொடுக்காதீர்கள்.
7. உங்கள் பின் எண்ணை உங்கள் வேலெட்டிலோ அல்லது பர்ஸிலோ எடுத்துச் செல்ல வேண்டாம்.
8. உங்கள் பின் எண்ணை உள்ளிடுவதை யாரையும் பார்க்க விட வேண்டாம்.
9. ஒருபோதும் உங்கள் பிறந்த நாள் அல்லது தொலைபேசி எண் போன்ற எளிதில் யூகிக்கக்கூடிய பின் எண்ணை பயன்படுத்த வேண்டாம்.
10. உங்கள் கார்டை ஒருபோதும் ஏடிஎம்மில் அப்படியே விட்டுவிடாதீர்கள்.
11. உங்கள் கார்டை ஒருபோதும் கவனிக்காமல் அப்படியே விட்டுவிடாதீர்கள், எ.கா. காரில், ஹோட்டல் அறையில் அல்லது வேலை செய்யும் இடத்தில் அல்லது வணிக நிறுவனங்களில்.
12. எலக்ட்ரானிக் பாயின்ட்-ஆஃப்-சேல் ஸ்வைப் டெர்மினல்கள் இல்லாத வணிக நிறுவனங்களில் உங்கள் டெபிட் கார்டைப் பயன்படுத்த முயற்சிக்காதீர்கள்.
13. பின் மெயிலரை ஸ்கிராட்ச் செய்ய வேண்டாம். பின் எண் நன்றாக தெரிவதற்கு, உறையின் ஓரத்தைக் கிழித்துத் திறக்கவும்.
14. உங்கள் ஏடிஎம் பின் எண்ணை கேட்டு வங்கி அனுப்பியதாகக் கூறப்படும் எந்த மின்னஞ்சலுக்கும் பதிலளிக்க வேண்டாம். இவை பிஷிங் முயற்சிகள் எனப்படும். ஏயூ ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்கில், எங்கள் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை நாங்கள் மதிக்கிறோம், நாங்கள் எந்த நோக்கத்திற்காகவும் பின் எண் போன்ற தனிப்பட்ட விவரங்களைக் கேட்க மாட்டோம்.
15. நம்பகமானதாகத் தோன்றாத அல்லது மாற்றியமைக்கப்பட்டதாகத் தோன்றும் / சந்தேகத்திற்கிடமான சாதனம் இணைக்கப்பட்டுள்ள / சந்தேகத்திற்கிடமான முறையில் இயங்கும் எந்தவொரு ஏடிஎம்மிலும் உங்கள் பின் எண்ணைப் பற்றிய தகவலை வழங்க வேண்டாம்.
16. உங்கள் பணத்தைக் காண்பிக்க வேண்டாம், பணத்தை எண்ண வேண்டாம், உங்கள் பாக்கெட்டில் பாதுகாப்பாக வைத்துவிட்டு ஏடிஎம்மில் இருந்து வெளியேறவும்.
17. ஏடிஎம்-ஐ பயன்படுத்தும் போது யாரிடமிருந்தும் அல்லது பாதுகாவலரின் உதவியையோ ஏற்க வேண்டாம்.

**ஏயூ வங்கி ஏடிஎம்களில் ஏடிஎம் பணம் எடுத்தல்:- ஏடிஎம் தொடர்பான புகார்களை பதிவு செய்வதற்கான தகவல்**

1. <u>அனைத்து ஏயூ வங்கி அல்லாத வாடிக்கையாளர்களுக்கும்:-</u> ஏயூ வங்கி அல்லாத அனைத்து வாடிக்கையாளர்களுக்கும், ஏடிஎம் பரிவர்த்தனை தோல்வியுற்றால், அந்த ஏடிஎம் கார்டு இணைக்கப்பட்டுள்ள கணக்கை பராமரிக்கும் வங்கியின் கிளையில் புகார் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்..

2. <u>அனைத்து ஏயூ வங்கி வாடிக்கையாளர்களுக்கும்:-</u> ஏடிஎம் பரிவர்த்தனை தோல்வியுற்றால், வங்கியின் ஏதேனும் கிளையில் புகார் அளிக்கப்பட வேண்டும் என்று அனைத்து “ஏயூ வங்கி வாடிக்கையாளர்களையும்” கேட்டுக்கொள்கிறோம். மாற்றாக, வாடிக்கையாளர்கள் ஏயூ வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்புகொண்டு புகார் அளிக்க, கொடுக்கப்பட்ட தொலைபேசி வங்கி எண்:- **1800 1200 1200**-ல் உதவி பெறலாம்.

**இந்த ஏடிஎம் தளம் ___________________________ பிரிவின் கீழ் வருகிறது.**
**குறிப்பு:- இந்த பகுதி சிசிடிவி கண்காணிப்பில் உள்ளது.**
**<u>பணம் திரும்ப உள்ளிழுக்கப்படுதல்:-</u> ஏடிஎம்மில் பணம் திரும்ப உள்ளிழுக்கப்படுவது முடக்கப்பட்டிருப்பதால், வழங்கப்பட்ட பணத்தை மறக்காமல் எடுத்துக்கொள்வதை உறுதிசெய்யவும்.**

<u>அனைத்து முக்கிய வகையான கார்டுகளும் ஏயூ வங்கி ஏடிஎம்களில் பணம் எடுக்கும் பரிவர்த்தனைகளைச் செய்ய பயன்படுத்தப்படலாம்.</u>